118

உ

உமாநாத் சங்கர்.

# மனுநீதிகண்ட சோழன் திருவாரூர் சோபனக் கும்மி.

திருமெய்ஞ்ஞானம் மஹாவித்வான்

குலோத்துங்கசோழ ம. கிருஷ்ணஸாமி நாயகர்

அவர்கள் மாணவர்களில்

முடிகொண்டான் கலைமகள் சங்க…

நா. சட்டயப்ப சிவம் அவர்களால்

பாடப்பெற்று

திருவாரூர்

கவர்ன்மெண்ட் "சீவகாருண்ய பக்ஷ வைத்தியசாலை"

டாக்டர் மகா-ா-ா-ஸ்ரீ

M. ஆதிமூல முதலியார் அவர்களால்

ஆதரிக்கப்பெற்று

திருமுல்லைவாசல்

"மதுரை முத்தமிழ்ச்சங்கம்" பாலபண்டித கலாவல்லபர்

மகா-ா-ா-ஸ்ரீ

R. E. காளியப்ப தாஸ் அவர்களால்

பார்வையிடப்பெற்று

திருவாரூர் "எட்வர்ட் பிரஸில்"

… T. B. அரங்கசாமிப் பிள்ளையவர்களால்

…ப்பிக்கப்பெற்றது.

… எப்ரல் மீ

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 APR 1928
MADRAS

6-85 MSS91, M
N25
11…

# விநாயகர் துதி—சிவப்புகழ்.

தத்த தன தத்த தன தத்த தன தத்த தன
தத்த தன தத்த தன —தனதான.

சக்கரையி னித்தவடை பிட்டுகட லைப்பொரிகள்
தட்டுநிறை முற்றகனி —யினிதூடே

சட்டமுட னிட்டுகரி மத்தகவ யிற்றனுமை
சத்தியருள் புத்ரனிரு —வடிபேணி

இக்கலியில் மெச்சுயர்சி வப்புக ழினிப்புகல
இட்டமொடு சித்தியரு —டருவாயே

இச்சையொடு வச்சிவனே சுற்றிபழ னிப்பதியி
னிப்புளக னிப்பெறுகை —யுடையோனே

சிக்கரவு முத்தமிழை மெத்தவுய ரக்கிரியில்
செப்பிடகு றித்தவெழில் —முதல்வோனே

திக்கதனி லுற்றமரர் சித்தர்களை திட்டசிறை
திட்டமற வைத்துபுவி —துயர்மேவ

அக்கிரம முற்றவசு சிட்டவுணர் பட்டுவிழ
வக்கினியை கக்கியெழு —வடிவேலை

அச்சமெழ விட்டவல சப்பிரம ணிப்புகழ
வத்திமுக முற்றுவரு —முதல்வோனே.

# முகவுரை.

"ஒன்றா யுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்ப தொன்றில்."

OFFICE MA 11

கடல்புடை சூழ்ந்த வுலகில் மானிடராய்ப்பிறந்த யாவரும் இகபரசாதனத்திற்குத் தேடவேண்டிய ஊதியம் பொதுஜன நன்மைக்காகவும் தெய்வ கைங்கர்யத்திற்காகவும் தனது ஊழியத்தைச் செலுத்தி என்றும் அழியாத கீர்த்தியை நிலைநாட்டுவது என திருவள்ளுவ நாயனார் கூறியுள்ளார். இன்னும் நமது தற்காலத்துக் கல்விச்சிரேஷ்டராகிய ராபேந்திரநாத் தாகூர் என்பவரும் "A man's stay in the world is utter wastefulness unless his action is a medium of worthful service either to men or to God." எனவுங் கூறியுள்ளார். ஆகையால் அதற்கிணங்க இந்தத் "திருவாரூர் சோபனத்தைப்" பாடவேணுமென்று சில நண்பர்கள் முடிகொண்டான் கலைமகள் சங்கம் நா. சட்டயப்ப சிவம் அவர்களைக் கேட்டுக்கொண்டும் சிற்சில அசௌகரியத்தினால் இதுகாறும் பாடாது சுணக்கிவிட்டனர்.

யாவருமறியாது ஓர் பசுவின் கன்று இரதச் சக்கரத்தில் விழுந்து உயிர் துறக்க அக்கன்றின் தாய்ப்பசுவுக்காக ஜீவகாருண்யம்பாராட்டி அத்தேரைச் செலுத்தித் தன் அரும்புதல்வனைத் தேர்ச்சக்கரத்தில் விட்டறைத்து நீதியைப் பரிபாலனம் செய்த "மனு நீதி கண்ட சோழன்—திருவாரூர் சோபனக் கும்மியை" மோட்சத்திற்குரித்தானதும், தூய்மை பொருந்தியது

மான பசுக்களுக்கும் கன்றுகளுக்கு மேற்படும் பிணிகளையும் துயர்களையும் நீக்கி ஜீவகாருண்யம் பாராட்டி அப்பசுக்களுக்குத் தொண்டு செய்வதிலேயே தமது வாழ்நாள் ஊழிய முழுவதும் செலுத்திவரும் திருவாரூர் கவர்ன்மெண்ட் ஜீவகாருண்ய பசு வைத்தியசாலை மகா-ா-ஸ்ரீ டாக்டர் M. ஆதிமூல முதலியாரவர்கள் ஆதரவால் இச்சிறுநூலை இப்போது உலகங் களிக்கப் பாடி முடித்தனர்.

இந்தத் "திருவாரூர் சோபனக் கும்மியை" சாதாரண ஜனங்களுக்கும் பெண்களுக்கும் எளிதில் விளங்கும்படியாக "மனுநீதிகண்ட சோழன்" சரித்திரத்தை யாவரும் எளிதில் தெரிந்து களிப்பெய்தும்வண்ணம் மகா-ா-ஸ்ரீ டாக்டர் ஆதிமூல முதலியாரவர்கள் ஆதரவைக்கொண்டு இந்நூலைப்பாடி முடித்திருப்பது நம் புராதீன நகரமாகிய திருவாரூருக்கு ஓர் நூதன சிறப்பாகுமென்பது எமது துணிபு.

31—3—1925. R. E காளியப்ப தாஸ்,

திருமுல்லைவாசல்.

# திருவாரூர் சோபனக்கும்மி.

## சாற்றுக்கவிகள்.

நன்னிலம் தாலுக்கா பேரைகுடி சோழவம்ஸ
மகாதேவ நாயக சுவாமிகள் புதல்வர் மகா வித்வான்
**ம. கிருஷ்ணசாமி நாயகர் அவர்கள் வாக்கு.**

வெண்பா.

1. மனுநீதிச் சோழனெழின் மாச்சரித கும்மி
தனையினிதாய்ப் பாடிவைத்தான் தாதின்—னனைதுவைத்து
விட்டுவப்பால்வண்டுமெணம்மேவு முடிகொண்டான் வாழ்
சட்டயப்ப சிவமென்போன் தான்.

---

திருமெய்ஞ்ஞானம் "இறைதளி"
யோகீஸ்வர ஸ்வாமிகள் மடம் சோழவம்ஸ குலகுரு
**ம. மதுரை வர்மா அவர்கள் வாக்கு.**

வெண்பா.

2. சங்கரனும் மம்புவியை தாங்கரவுங் கும்பமுனி
யுங்கமலனுங் கழறக்கூடுமோ—விங்கென்
தவமெழுந்து சூழ்ந்து தழுவு சட்டயப்ப
சிவமொழிந்த கும்மிச் சிறப்பு.

---

திருவளூர் ஸ்கூல்மாஸ்டர்
**M. S. இராமவர்மா அவர்களின் கவி.**

கலிவிருத்தம்.

3. அட்டதிக்கு மறிய சுதனைத் தேர்
விட்டறைத்திடும் வேந்தனின் சோபனம்
கொட்டவைத்தவன் "கொண்டான் முடி" வளர்
சட்டயப்ப சிவம் குகத் தாசனே.

திருமுல்லைவாசல், மதுரை தமிழ்ச்சங்கத்து

பாலபண்டிதர்

## R. E. காளியப்பதாஸ் அவர்கள் வாக்கு.

4. நீதமெழ வாரூரில் செங்கோல் செலுத்திய
நீதி மனுச்சோழன் புகழை
ஆதிமூலம் முதலி யாதரவில் செந்தமிழ்சே
ரரிய வெழில் சோபனமதாய்
வேதமுணர் ஞானிகளு மண்ணுலகி லியாவரும்
வியக்கயிதை பாடியவன் சீர்
பாதிமதி ஆடரவு வேணியனின் பொற்கழலைப்
பணி சட்டயப்ப சிவமே.

---

முடிகொண்டான்

"கலைமகள் சங்கம்" காரியதரிசி மகா-ா-ா-ஸ்ரீ

## கா. வீராஸ்வாமி பாகவதரவர்கள் வாக்கு.

5. உம்பர் புகழாரூரில் செங்கோலோச்சி
உயர்சுதனை ரதச்சகடா லூற்றறைத்து
இம்பர் தனிலுயர் கீர்த்திபெற்ற சோழன்
இருங்கதையை சேக்கிழா ரிசைத்தார் முன்னால்
சம்புவின் செஞ்சரணமதை தினம் துதிப்போன்
சதுர்மறைத னிசை பரவு முடிகொண்டான் வாழ்
நம்புமொழி சட்டயப்ப சிவப் பாவல்லோன்
நாட்டினில் சோபனமதுவாய் நவின்றிட்டானே.

# மனுநீதி வெண்பா.

### விநாயகர் துதி.

1. வித்தை மிகுபுத்தி விளங்குமெய் ஞானமொடு
மெத்த கனயோகம் விளங்கிடுமே—நித்தமுநாம்
வெள்ளை விடையேறும் விமலனரு ளத்திமுக
வள்ள லிருதாள் போற்று வாம்.

### சிவன் துதி.

2. நீத்தத் தனிவேடம் நீடுலகில் பூண்டுபிள்ளை
தூத்தசையோ டேயளிநீர் சோறுண்ண—ஆத்தன்
விருந்துக் கிசைந்தானும் வீயாத்தியின் கீ
ழிருந்தானு மெங்கட் கிறை.

### விட்டுணு துதி.

3. கைகுவித்த மெய்யன்டர் காதலிக்கவே யருளை
செய்வித்தா னுயர் திருமனையில்—நெய்திருடும்
நேயத்தா னீளரவில் நின்று நடம்புரியும்
மாயத்தான் தாள்நிழல் நம் வாழ்வு.

### முருகன் துதி.

4. வச்சிரத்தால் மால்வரையை வாட்டிச் சிறகரிந்தோன்
உச்சிதமாய்த் தந்த வொருபிடியும்—கச்சிற்
பொதிந்த முகிழ் வள்ளியெனும் பூங்கொடியு மேவி
வதிந்தவன் சண்முகன் தாள் வாழ்த்து.

### மனுநீதிச் சிறப்பு.

5. ஆய்ச்சி மணியசைத்த ஆவுக்கிரங்கி செங்கோ
லோச்சுரிய சேயை வருளைக்கீழ் - மூச்சழியத்
தேரோடு நீதிசெலுத்து மனுச் சோழனுக்கு
நீரோடிப் பாயும் நிலம்.

### நற்சேர்க்கை.

6. பதியும் நிதியும் பலர்மெச்சும் வாழ்வும்
புதிதான யோகப் புகழும்—கதிபெறலாம்
மெய்யோடு கற்கையும் மேலோர் பழக்கமும்
கையாளக் கற்றிடுங் கால்.

### கடவுள் இருப்பிடம்.

7. ஐந்தெழுத்து மோதி யறமமைந்த மெய்யினர்கள்
சிந்தையென வுரைப்பர் சிரியர்கள்—சுந்தரகி
லாண்டமலே மாதுபங்க ளுடிப் புலியூரில்
தாண்டவத்தா ளுடும் சபை.

### உயர் பதவி.

8. மாடமணிகூட மருவு மகளிரும் பொய்
வேடமெனக் கண்டு விளங்கிலீர்—நாடி
உருவத்தோ டென்று மொளிரு மொளியோங்கு
திருவத்தைக் கண்டு துணி.

### உலகில் முக்கியகர்மா.

9. மண்ணிற் பிறந்து மனையும் பொருள்தேடி
பண்ணும் கருமம் பலவுளதும்—எண்ணுங்கால்
நீள்புகழே யாற்றி நிலங்கமலத் தாள்மருவு
கேள்வனைப் போற்றல் கெடி.

### உண்மையினுயர்வு.

10. மெய்யைத் தழுவியிந்த மேதினியி லெஞ்ஞான்றும்
பொய்யைத் தவிர்த்த புனிதரைக்—கையில்
விருந்தோ டழைக்குமே விண்ணுடு மண்ணும்
பொருந்துமரிச் சந்திரனைப் போல்.

### கற்பின் மகிமை.

11. மஞ்சுநிரை யில்ல மருவு மடந்தையற்கு
அஞ்சப்புள் தாயற்று யலரியழு—நஞ்சரவு
நேரிசைத் தாலாட்டும் நிடதன் குலக்கொடியாள்
சீரிசைத் தாள் கற்பின்திறம்.

12. குண்ணி வளமற்று குடிசையில் புக்கிடினும்
எண்ணிய நல்யோக மினிதுபெற—விண்ணாடு
போற்றித் தழுவயில்லம் பொருந்துநெறியை முனம்
சாற்றினாள் சாவித் திரி.

## கற்பின்மை.

13. வேற்றான் நயமதனை விரும்பி தனக்குரிமை
எற்றானை விட்டயிள மங்கை—மாற்றான்கை
சிக்கு தனம்போல் சிதறி நிலைபிசகி
திக்கற் றலைவரே சீ.

## மதுவுண்ணுமை.

14. பகுத்தறிவு தோன்றப் பலகலையுங் கற்று
வகுத்து முறை செய்யும்வழியில்—மிகுத்தனென
சீரிட்ட தந்தை சிறப்புக்கு நேர்கெடுதி
தூரிட்டக் கள்ளைத் தொடல்.

## கடவுள் ஏகம்.

15. எச்சமயந் தன்னி லிருப்பாணும் காய்கனிபூ
பச்சை தழை பறவை பல்லுயிரை—வைச்ச
ஆதியொருவனென வாய்ந்துதொழு முத்தமர்க்கு
சோதி இரவி எழுஞ்சொல்.

## கற்கை.

16. கற்றதனைக்கொண்டு கனமமதையால் மகிழ்ந்து
உற்றதனைக்கண்டு வுணராது—சிற்றறிவுக்
கெட்டியதுபோது மெனமகிழேல் நெஞ்சேதேர்
இட்டமொடுகேன் நூல் ஞனம்.

## மக்கட் சிறப்பு.

17. சீருற்ற செல்வச் சிறப்பெய்து மாந்தர்க்குப்
பேருற்ற மக்கட் பிறப்பற்றால்—நேருற்ற
வாணுடு பெற்றிலராய் வன்கொம்பு தேன்கண்ட
கூனரென நிற்பரே கூறு.

18. அளவற்ற துன்ப மணுகி யிரந்துண்டு
வளமற்று வாயும் வயிறும்—களையுற்று
பொடிய வருமயர்வும் போகுமே சுட்டி
முடி-குதலை வாயின் மொழி.

## கூடா நட்பு.

19. காணும்பொழுது முனம் காதலித்து நேயமொழி
பேணிப் புறம்பில் பிதற்றுமவர்—கோணி
நட்பின்றிற மகன்ற நாணின்மை யென்கின்ற
வெட்கந் தனக்கிவரே வித்து.

உ

# மனுநீதிகண்ட சோழன் திருவாரூர் சோபனக் கும்மி.

## கடவுள் வாழ்த்து.

கட்டளைக்கலித்துறை.

### விநாயகர் துதி.

1. நீடும் பனுவற் றிருவாரூர்ச் சோபனம் நீள்புவியிற்
பாடும் படிக்குக் கவிநாவளித் தருள் பண்ணவன்சீ
ராடும்படிக்கு முனிமொழி வேதமது வரைந்தோன்
தேடும் பெரும்புகழ் வாதாவி வாரணத் தேசிகனே.

### சிவன் துதி.

2. விண்ணவ னந்திரி கரியுரி போர்த்தவன் வீய்விடத்தே
யுண்ணவ னந்திரி கண்ணப்ப னெச்சி லுகந்துமுனந்
திண்ணவ னந்தத் திரிபுரஞ் செற்றவன் தீனுதல்சேர்
கண்ணவ னந்தெழில் புற்றிடங் கொண்டெனைக் காப்ப
[வனே.

### விட்டுணு துதி.

3. காப்பவன் வான்புவி யாயர்தம் பாலைக் கவர்ந்து ருசி
பார்ப்பவன் பாற்கடல் பள்ளியன் மேவிப் பசுநிரையை
மேய்ப்பவ னன்பர் துயர்களைந் திடரை மேதினியில்
தீர்ப்பவன் செந்திரு நாயக னென்னுளச் சிந்தையனே.

### முருகன் துதி.

4. சிற்றையில் ஞான முதிர்ந்துள நற்சைவ தேசிகன்போல்
தந்தை செவியி லுபதேசம் வைத்துச் சதுமுகனை
நொந்திட வெஞ்சிறை மீதிட்டுலகை நொடியில் வலம்
வந்திடுங் கந்த னெந்தனுக் குதவிசெய் வான்றுணையே.

### கலைமகள் துதி.

5. வானின்றுளிக்கும் நெடுந்தாரை யன்னநல்வாக்கருளித்
தேனின்றுளிக்கும் வான் கற்பகம்போ லுயர் சீருதவி
நீனின்றளித்தருள் நீள்புவி யாவையும் நேரிசைத்த
பூனின்றநான்முக னுவமர் வேதாந்தப் பொற்கொடியே.

## கும்மி.

### விநாயகர் வணக்கம்.

1. சீருலவு கொன்றை நொச்சி எருக்கலர்
சேர்ந்திடும் வேணிய னீன்றருளும்
காருலவு முடிகொண்டானில் மேவிடும்
கற்பகப் பிள்ளையார் காப்பாமே.

### சிவன் வணக்கம்.

2. பம்பும் சுரும்பமர் கொந்தலர் குழலி
பாவையாள் மனைக் கோரிரவில்
நம்பி யாரூரனுக் காக நற்றூது
நடந்தவன் கழல் காப்பாமே.

### பார்வதி வணக்கம்.

3. இளவரசாகிய மைந்தனை தேர்க்காலில்
இட்டு பசுவுக்கித மளித்த
உளமகிழ் வாமனு நீதிச் சோழன் கும்மிக்
குத்தமி பார்வதி காப்பாமே.

### விட்டுணு வணக்கம்.

4. மூல மென்றழைத்த யானைக் கருள்செய்த
முதல்வன் பாற்கடல் கண்வளர்ந்தோன்
ஞால முண்டகிலம் காத்திடு மாயவன்
நளினப் பொற்பதம் காப்பாமே.

### சுப்பிரமணியர் வணக்கம்.

5. புள்ளிக் கலாப மயிலில் நடமிடும்
புண்ணிய னோரகப் பொற்பமரும்
கள்ளவிழ் கடப்பந் தாரணி கூரயில்
கந்தவேள் சேவடி காப்பர்மே.

### சரஸ்வதீ வணக்கம்.

6. அண்டம் படைத்தவ னில்லக் கிழத்தியாள்
ஆரணத் துறையாள் அம்பிகையாள்
வெண்டாமரை தனில் வீற்றிருப்பா ளெங்கள்
விமலை யமலை காப்பாமே.

### குரு வணக்கம்.

7. தரையில் ஞான மூலவிப் பரவிடத்
தமிழைக் கற்பிக்கும் தாதை யெங்கள்
இறைதளி மஹா தேவரின் புதல்வர்
இணைமலர்ப்பதங் காப்பாமே.

---

## திருவண்ணாமலை
## பரபிர்மாநந்தயோகீந்திரசரஸ்வதிசுவாமிகள் துதி.

8. அரியயனடி முடி காணு தெழில்
அண்ணுமலை தனில் மேவு மெங்கள்
பர பிர்மயோ கீந்திர சரஸ்வதி
பாதமிரண்டு நம் காப்பாமே.

9. அரிய புகழும் பெரிய கீர்த்தியு
மடையலா மெங்க ளண்ணுமலே
சரஸ்வதி யோகி ஸ்வாமிகள் பொற்பதம்
சந்ததமும் பணிந்தேத்துவதால்.

### அவையடக்கம்.

10. கற்றவர் வளைத்த கண்ணுதல் மகிழும்
காவலன் கதையைச் சோபனமாய்
உற்றறி யாதநான் கூறுத லூமையன்
உரைக்கும் வாய்மொழி யொக்குமம்மா.

### நூல்பிறந்த காலம்.

11. ஐயாயிர மிரு பத்தைந்து வாண் டெனு
மருங்கலிசே ரக்ஷாக்ஷி தனில்
பொய்யாத நீதி புரவலன் சோபனம்
புகன்ற காலமென் றேதுங்கடி.

### ஆதரித்தவர்.

12. கச்சி ஆதிமூல முதலியார் நீதி
காவலன் கதையைப் பாடச்சொல்லி
இச்சையோடு கவி வாணர்க்கு யீந்ததில்
இவ ரொருவரென் றேதுங்கடி.

### ஆக்கியோன்.

13. பண்டை காலமுத லோரளவாக வோர்
பனை விருட்ச மிருக்கு முடி
கொண்டா னகருறை சோழ பரம்பரை
குலத் துதித்திடும் நாராயணன்.

14. தந்திடும் காதலன் சட்டய்ப்ப சிவம்
தாரணியில் பெண்கள் பூஷணமாய்
அந்தமுடன் "ஆரூர் சோபனக் கும்மியை"
அவனி களிக்கப் பாடிவைத்தான்.

## நாட்டுச்சிறப்பு.

15. நாட்டிலே மிகு நற்றவம் பெற்றயர்
நறுமலர்ப் பொழில் நன்னாடு
கூட்டிலே வளர் கிள்ளையும் பருந்தும்
கூடிக்குலவிடு மன்னாடு

16. காட்டிலே திரி யானையும் சிங்கமும்
கலந் துறவு செய் நன்னாடு
தாட்டிக மொடு செந்நெலும் நன்னெலும்
தழைத்துப் பெருகு மன்னாடு.

17. மாதமும் மாரி பொழிந்து நலந்தரு
மருதஞ் சூழ்தரு நன்னாடு
சூதமுங் கதலி கற்பக முலவுஞ்
சோழ மண்டல மன்னாடு.

18. நெற் கதிரின்குலை வாழை மேல் சாய்ந்திட
நெருங்கி யக்குலை பூங்கமுகின்
கற்பகத் தருவில் சாய்ந்திடக் குடிகள்
கண்டு களித்திடு மன்னாடு,

19. ஆவுக்கனுரு மிடர் பிணி தீர்ப்பவர்
அன்னவ ராதிமூலம் தமிழின்
பாவுக் குதவிப் பரிசளிப் பாரென
பாடிடும் தத்தைகள் பண்ணை யெல்லாம்.

## காவேரிச்சிறப்பு.

20. தங்கள் கணவனைத் தெய்வமென் றேத்திடும்
தையலார் தங்கள் மனம்போலே
பொங்கு வளந்தரும் பொன்னியின் தென்கரை
புலவர் போற்றிடும் பொன்னாடு,

21\. தேன்கமழ் கொன்றையும் முத்தும் பவழமும்
சிந்துரக் கோடும் திரட்டி வரும்
வான்கமழ் காவேரி தாயகம்விட்டுப் பெண்
வாழ்ந்திடப் புக்ககம் போலதொக்கும்.

### திருநகரச் சிறப்பு.

22 தேவர் கோன்பூசித்த தியாக னுமையொடு
சிகியி லேறுங் குமரனையும்
கூவி யித்தரையில் கொண்டுவந்த முசு
குந்த சக்ரவர்த்தி நன்னகரம்.

23\. கற்றைச் சடைமுடி வன்மீக ஞெழில்
கமலாலயஞ்சூ ழின்னகரில்
புற்றிடங்கொள்ளப் புரந்தரனர் வந்து
போற்றிப் பணிந்திடும் பொன்னகரம்.

24\. விண்ணை யளாவிடுங் கோபுரங்கள் பல
வீதி நிறைந்த பல் மாளிகைகள்
எண்ணறியா பல ஆவண வீதிகள்
இலக்குமி தோற்றமே யாகுமம்மா.

25 தொடர்ந்த மாளிகை சூழ்திருவீதியில்
தோகையர்க்காகவே தூதொரு நாள்
நடந்த செஞ்சடை நாதன் கழற்றுகள்
நாளும் நறுமணம் வீசுமம்மா.

26\. வேத மெய்ஞ்ஞானிக ளெங்கெழுத்தைத் தினம்
விளம்பக் கேட்ட பசுங்கிளிகள்
கீதமோ டுறைக்க நாகணப் புட்களும்
கேட்டு மொழிந்திடும் சோலையெலாம்.

27\. மூவர் பாவோசையுஞ் சேரமான் புகன்ற
மும்மணிக் கோவை யந்தாதியுலா
பாவதி ஞைசையும் மாணிக்க வாசகர்
பாடலு முழங்கும் வீதியெலாம்.

28. புகழு மூவரி ருத்திரனே முதல்
பொங்கொளியில் ரவி பூதலத்தில்
நிகழு மந்திரத் தைந்தெழுத்தே முதல்
நிகர்வ தொக்கு "மிவ்வாரூரே".

29. மாயவன் மார்பி லணிந்த பதக்கத்தின்
மணியைப் போலெழில் வீசுமென்றால்
தூயத் திருவாரூர் வீதியின் சிறப்பை
சொல்வதற் கென்னாலே கூடுவதோ.

## தீர்த்தச் சிறப்பு.

30. அறம் நிரம்பிய செந்திரு மாயனை
ஆசைக் குகந்திடும் நாயகனாய்ப்
பெற விரும்பித் தவம்புரிந்த பொய்கை
பெற்றது பேர் கமலாலயமே.

31. மன்னன் திரிசங்கு நீச்ச வுருவத்தை
மாற்றி யயாதிக்கு மூப்பகற்றி
நன்னலம் பெருக மோன மளித்ததும்
நளிர் புனல் கமலாலயமே.

32. சேல்குதிக்க பலாக்கனி தேனடை
சிதறிவுடைந்த தீஞ்சார் பல்
கால்வழியாகவே ஓடி செங்கழுநீர்
கயத்தில் வந்து நிறையுமம்மா.

33. மண்டலம் புகழும் தொண்டர் புராணங்கள்
மாநில மெங்கு மிசை பெறவே
கொண்டு வந்த அனபாய சக்கரவர்த்தி
குன்றாத நீதித் தனிக் குடையான்

34. அன்னவன் சந்ததி யானிந்த ஆரூரை
அரசு புரிந்த அற்புதன்சீர்
மன்னவன் னீதி மனுக்கண்ட சோழனின்
மாட்சிமை சொல்லுவேன் கேளுமம்மா.

35. செம்மனத்த னவன் தண்ணளிய னென்றும்
தீமை யகற்றி செகத்தையெலாம்
தன்னினத் தைப்போல காக்க நிழல்தரும்
தாரணி மெச்சுந் தனிக்குடையான்

36. அன்னவன் செங்கோ லாக்கினையா லென்றும்
ஆவொடு புலியு மோர்துறையில்
நன்னல மேபெற தண்ணீ ரருந்தி
நயமொடு நேசம் செய்துவரும்.

37. முத்தமிழ்க் குதவியீந்திடு மாதி
மூல முதலியார் கீர்த்தியைப் போல்
எத்திசை தன்னிலும் மங்கள வோசை
இனிது பெருக ஆண்டுவந்தான்.

38. ஆளு மன்னவன் சோழன் தனக்கொரு
அரிய மாமக வில்லாமல்
நீளும் பொற்சடை தியாகேச னடி
நிதமும் பணிந்து போற்றிவந்தான்.

39. அல்லல் பிணியை யறுத்து சுகமருள்
ஆனந்தத் தாண்டவன் தன்னருளால்
பல்வளங் கொழிக்கும் மன்னவனுக் கொரு
பாலன் பிறந்தனன் பார்தனிலே.

40. சீருஞ் சிறப்பும் பொருந்த வப்பாலனை
சீராட்டி மாமுனியோர் புகழ
பேரும் விடங்கனென் றழைத்து நாளுமே
பெருமையுடனே வாழ்ந்து வந்தான்.

41. சகலகலை ஞானம் கற்பித்து மன்னவன்
கண்மணி வீதி விடங்கனுக்கு
இல்லற மேற்றிட தன்னர சிந்திடு
மினிய யோகத்தைப் பார்த்திருந்தான்.

42. மாமனார் மாமி கணவனுமே தங்கள்
மனதில் வழிபடும் தெய்வமென்று
நேமமொடு தினம் வணங்கும் பெண்களின்
நெஞ்சமென வளர்ந்தான் குமரன்.

43. மன்னுயி ரனைத்துந் தன்னுயிர்போல் காக்கும்
மன்னவ நீதியை சோதிக்கவே
பொன்னவிர் செஞ்சடை வன்மீகன்செய்தவப்
புதுமை யுரைப்பேன் கேளுமம்மா.

44. ஈசனங்கோர் பசுவாகி முனம்
எம தர்மனொரு கன்றாகி
வீசு நறும்புக ழாரூ ரணுகி
வீதி வழியாக சுற்றிவந்தார்.

45. வேதம் பயின்றெழில் தந்தையின் கீர்த்தியை
விளக்குங் கோமகனோர் தினத்தில்
சோதி மிகுந்ததோர் ரதத்தி லேறியே
சொகுசாய் வீதிவழி போந்தான்

46. வடக்கு மாமட வீதியிலே ரதம்
வந்து திரும்பிடு மெல்லைதனில்
துடுக்கென்று வந்த இளம் பசுங்கன்று
துள்ளியே பாய்ந்தது தேர்க்காலில்.

47. ஆய்ந்த ஞானமுங் கல்வியு மற்றவன்
அடைந்த செல்வ மழிவதுபோல்
பாய்ந்த கன்றின்மேல் சக்கர மோடப்
பதைத்துக் கன்று மிறந்ததுவே.

48. கன்று மரித்த தறிந்ததுங் கோமகன்
கலங்கி தேரைவிட்டே குதித்து
என்று மறிவுறு சோகத்தி லாழ்ந்தே
யீசனே யென்செய்வே னென்றழுதான்.

49. தந்தை யறிந்திடு முன்பதற் காகவே
தகுந்த சாந்தியைச் செய்யவெண்ணி
சிந்தை துயரொடு அந்தணர் வாழ்ந்திடும்
சிறந்த மாளிகைக்குள் நுழைந்தான்.

50. கொண்ட கணவனைக் கைவிட்டு வோடிடுங்
கோதையர் கண்ணீர் விடுவதுபோல்
அண்டையில் நின்றிடும் தாய்ப்பசு கண்ணீரை
ஆற்றுப் பெருக்கென விட்டதுவே.

51. கன்று மரித்த கடுந்துயரால் பசு
கதறி பதறி சோகமுற்று
குன்றிடா நீதி வழங்கிடும் கொற்றவன்
கோபுர வாசலின் முன்பு வந்து

52. அரசர் கோமகன் வாசலிற்கட்டிய
ஆராய்ச்சி மணியி னண்டையில் போய்
பரவசமுற்றுக் கொம்பினால் மணியை
பற்றி யசைத்தது அப்பசுவும்.

53. ஆதி காலமுத லடிபடா தந்த
ஆராய்ச்சி மணியினோசை வந்து
வேத பாராயண கோஷ்டியி லிருந்த
வேந்தன் செவிதனி லேறியதே.

54. சிந்தை மெலிந்தபசு தளர்ந் தாட்டிய
செம்மணி யோசை யவர்செவிக்கு
மைந்தனைக் கவரும் மறலியூர்தி
மணி யினோசையைப் போன்றதம்மா.

55. அன்னது கேட்டது மன்னவன் துடித்து
அருகில் பார்த்தனன் மந்திரியை
என்ன நடந்தது என்று நீரறிந்து
இயம்புவீ ரென்றெடுத் துரைத்தான்.

56. விந்தைசேர் ஞானம் விளம்பிடு மந்திரி
விரைவில் கோட்டை முன்னேடிவந்து
அந்தமேவு மெழில் ஆராய்ச்சி மணியை
அசைத்த பசுவைக் கண்டறிந்தான்.

57. செந்தமிழ் வாணர்க்குத் தந்திடா வாழ்ந்திடும்
செல்வரைச் சூழ்ந்திடு வெந்துயர்போல்
நொந்து கலங்கியே பசுவைக்கண்டதும்
நோக்கினன் மறித்த கன்றையுமே.

58. கல்வியும் ஞானமும் முற்று முணர்ந்தவன்
கருணை சேருங் கலா வல்லபன்
புல்லியே வெம்பழி வந்தது நம்மிளம்
பூமகன் தேரினு லென்றுணர்ந்தான்,

59. மந்திரி வரவைக் காத்து வெகுநேரம்
மயங்கி மன்னவ ஞேடிவந்து
சிந்தை கலங்கியே பசுவைக் கண்டனன்
செங்கோலன் மனு நீதிபனும்.

60. அரசன் வரவைக் கண்டதும் பசுவும்
அழுதுமுன்னே நடந்து வந்து
விரைவில் கன்று மரித்த விதந்தன்னை
விளக்கிற்று கொம்பின் சைகையினல்,

61. தேரிலறைபட்ட கன்றின் முன்னே பசு
தேங்கி யழுதிடக் கொற்றவனும்
பாரிலே யித்தகை குற்றத்தைச் செய்திடும்
பாதகன் யாவனென் றேவலிட்டான்,

62. முற்று முணர்ந்தவன் மந்திரி துடித்து
முகம் சுணங்கி மனம் பதைத்து
எற்று நீர்ஞாலத் திறைவ கேளென்று
யியம்புவா னதை யக்கணமே,

63. கொற்றவனீதி புரவல நம்மிளங்
கோமகன் சென்ற ரதக்காலில்
...றி யிருந்தோா றறியாம லிக்கன்று
துள்ளியே பாய்ந்தது வென்றுரைத்தான்,

64. யாவருக்கு மறியாது அறைபட்ட
ஆவி னருங்கன்று தோஷமது
போவதற்குப் பொற்றானங்கள் செய்வது
பொருந்து மென்றுரைத் தானமைச்சன்.

65. அரிபெரிதோ? அரன்பெரிதோ? வென
ஆட்சேபம் செய்திடு மாந்தரைப்போல்
உரிய நீதிக்கு வுற்ற துரைக்காமல்
உள்ளத்தில் வைத்து மயங்குகிறாய்.

66. கற்றறியாதவன் கையில் பொருள்தனைக்
கண்டவுடன் புகல் வார்த்தையைப் போல்
உற்றறியாமல் நீர் சொன்னது நீதிக்கு
ஒக்குமோ வென்றுரைத் தானரசன்.

67. வண்டமிழ் வாணர்க்கு நல்லுதவி செய்து
வாழ்த்துகளைப்பெறு மானிடர்போல்
எண்டிசை புகழும் வேந்தனு மயங்கி
என் செய்வ தென்றுடன் மெய்மறந்தான்.

68. தூய பெரும்புகழ் கீர்த்தி யுலாவிடும்
சூரிய குலத்தெம் சீர் நிலையை
தீய னொருவன் பிறந்தழித் தேனெனும்
தீராப்பழி வந்து மூண்டதையா.

69. பறவைக் கிரங்கி உடலைக் கொடுத்த
பானு குலத்தினில் யான்பிறந்து
கறவைக் கன்றை தேர்ச்சக்கரத்தால் கொன்ற
காதலன் தந்தையோ யான்பாவி.

70. கீர்த்தி பரவுங் குடும்பத்தில் புகுந்து
கீழ்மை விளக்கும் பெண்களைப்போல்
ஆர்த்த நான்மறை சோழவம்சத்தில்
அடியேன் பாவியு மேன் பிறந்தேன்.

71. தொண்டனைச் சோதிக்க பைரவனா யன்று
தோன்றலின் கறிமே லிச்சை வைத்து
அண்டர்கள் போற்றிட வாத்தி மாத்தமர்
அறனே வுன்செயலோ வறியேன்.

72. பானுவை மறைக்க சக்கரம் தொட்டவன்
பாண்டவர் தங்களை யாதரித்த
தேனுலவு துழாய் மாலை யணிந்திடும்
திருவின் கேழ்வனே வுன்செயலோ.

73. காரவுணகுலம் வேரறவும் தேவர்
கடுஞ் சிறைகளை மீட்டிடவுஞ்
சீரொளி பரவும் வேல்தனை யுந்திய
சிகி யுல்லாசனே வுன்செயலோ.

74. இந்த விதமாக மன்னவன் கலங்கி
எதிர் நின்றமைச்சைத் தானழைத்து
சிந்தை மெலிவுற தாய்ப் பசு கதற
தேர்விட்டேத்திய வென் சுதனை

75. பூமியில் கிடத்தி தேரை விட்டறைத்துப்
பொடி படுத்துதல் நீதியென்று
நேமியர்க் குற்றது செய்துவா வென்றனன்
நெறிமுறைகண்ட நீதிபனும்.

76. அன்னது கேட்டது மமைச்சன் பதைத்து
அரகர வென காது பொத்தி
என்னசெய்வே னிளவாசைக் கொன்றிட
எற்குமோ யின்னலத் தாரணியே

77. என்று பதைத்து கலாவல்லபன் சென்று
இளங்கன் றிறந்த வவ்விடத்தில்
நின்று தன் கழுத்தை வாளினல் துணித்து
நிமிடம் தன்னி லுயிர் துறந்தான்.

78. கதிரவன் குல மாபினில் வரும்
காவலன் மந்திரி யுற்றநிலை
அதிர சேவகர் கூறிட வாசன்
அங்கம் துடித்து மெய் சோர்வடைந்தான்.

79. சிந்தை மகிழ்ந் தறம்செய்யாத துர்க்குணச்
செல்வரைச் சூழ்ந்திடும் தீவினைபோல்
முந்திய துயரு மந்திரி துயரும்
மூடிக்கொண்டது மன்னவனை.

80. அல்லியங் கோதை அருமண வாளனே!
அம்புலி கங்கைசேர் வேணியனே!
எல்லையில் துயரம் என்றனுக் குற்றது
யார்செய்த வினையோ வென்று நைந்தான்.

81. கன்றின் பழிக்குந் தன்மந்திரி பழிக்கும்
கலங்கிக் கொற்றவ னேதுசெய்தான்
தன்றுணைப் புதல்வன் தன்னையுந் தேரையுந்
சடுதி கொண்டிங்கு வாருமென்றான்.

82. அந்த நேரமதில் தந்தையின் முன்பாக
அடக்கத்தோடு கை வாயும் பொத்தி
தந்தையே நீதிக் குகந்தது செய்கென்று
தாள் பணிந்தான் தவப் புதல்வன்.

83. தேவர்கள் மூவர்கள் யாவரும் புகழ
செங்கோல் செலுத்திடு மன்னவனும்
தாவியே ரதத்தைச் செலுத்தி மகனை
தரையில் கிடத்தித் தானறைத்தான்.

84. பாரில் பணத்தாசை கொண்டு தருமங்கள்
பண்ணாத துஷ்ட ரழிவதுபோல்
தேரிலறைபட்ட மைந்தனினுடலம்
சிதறியழிந்த தக்கணமே.

85. பசுவின் கன்றுக்காய் மைந்தனை மடித்த
பார்த்திபனைப் புகழ்ந் தந்தரத்தோர்
இசையும் புஷ்பத்தின் மாரியைப் பொழிந்து
எத்தி மனு நீதி வாழ்க வென்றார்.

86. இந்திர னளகை வேந்தனும் சூழ்தர
இரு புறத்திலும் கின்னரர்கள்
சந்ததம் பாடிட பச்சை மயிலிடம்
தங்கிடவுங் காளை மீதேறி

87. நெற்றித்தனிக்கண் நெருப்புடைவானவன்
நீளரவு கங்கை சென்னிபுனை
கற்றைச் சடைமுடி வேணிய னக்கணம்
காவலன் முன்னமே காட்சி தந்தான்.

88. தொல்லை பிறவி தொலைத்து சுகமருள்
சோதியைக் கண்டதும் காழி திரு
முல்லை சீனிவாசன் முகத்தைப்போல் சோழன்
முகமலர்ந்து களிப்படைந்தான்.

89. பொன்னம்பலவன் பிருங்கி கங்காளன்
புராந்தகன் விடைமேல் வந்தவுடன்
சென்னியு மண்ணில் புரண்டு வலம் வந்து
தேசிகன் பொன்னடி போற்றி நின்றான்.

90. அந்தர துந்துமி யார்த்தன தேவர்கள்
அலர் மழைதனைத் தான் பொழிந்தார்
முந்தியே நான்மறை யோசையு மெக்காளம்
முழங்கி யார்த்தன மண்ணும் விண்ணும்.

91. அன்பர்த முள்ளமே ஆலயமாய்க் கொண்ட
ஆடரவு புனை வேணியனார்
துன்ப முற்றமனுச் சோழனுக் கிரங்கி
சொல்லுவார் பன்னல வாசிகளை.

92. எண்ணரிய முனிவோரு மிமையவர்
யியக்க ராதி பகீரதனும்
மண்ணில் தவம்செய்த மாதவர் யாவரும்
மன்னநின் பக்திக்கு யீடுபடார்.

93 உனது நீதியைச் சோதிக்கயாம் பசு
உருவும் அந்தகன் கன்றெனவும்
வந்தனம் நீதிப் புரவல நீடூழி
வாழ்க நாளும் வழி வழியே.

49. என்றுரைத்துடனே இறந்தகன்றையும்
இள வரசையு மந்திரியும்
பொன்றுவதில் நின்று எழுப்பித் தந்தனன்
புண்ணியன் புற்றிடங் கொண்டபிரான்.

95. சந்ததமு முந்தன் நீதியும் வாழ்க
தனயன் வாழ்க தாரணியில்
உந்தன் கதையைப் படிப்பவர் கேட்பவர்
உலகி லென்னாளும் வாழ்க வென்றான்.

96. அரியநின் பெரும்பக்தியைக் கண்டு நான்
அக மலர்ந்து கருணையுற்றோம்
உரிய வரங்கள் யாவ துனக்கென்றான்
உத்தமி சத்தி யுமை கொழுநன்.

97. சூலமழுப் படையத்தனை வணங்கி
சொல்லுவான் நீதிப்புரவலனும்
ஞாலத்திலே யெந்தன் ராச்சியமு மதில்
நன்னெலும் செந்நெலு மோங்குகவே.

98. ஆடி முதற்கொண்டு மார்கழி வரையில்
ஆற்றிலே நீர் பெருக்கோடிவந்து
நீடியே வென்குடி வாழ்வுபெற் றோங்கிட
நிர்மலா யிவ்வரந் தந்தருளும்.

99. என்றதும் பரமன் சோழனுக்கு அந்த
இனிய வரத்தைத் தந்தருளி
நின்றவர் துதிக்க அந்தரத் தியானமாய்
நீர்மலி வேணியன் போய் மறைந்தான்

100. மன்னவனீதி மனுச் சோழன் செய்த
மாசற்ற செங்கோல் மகிமையினால்
இந்நிலந்தன்னிலே ஆற்றுப்பாய்ச்சல் பெற்று
இருக்கிறார் சோழமண்டலத்தார்.

101. வாழி மறைமுதல் வாழி யருந்தவம்
வாழி மனுமுறை வாழியவே
வாழி மனுநீதி சோழன் கும்மிப் புகழ்
வாழி யுலகெங்கும் வாழியவே.

முற்றிற்று

எட்வர்ட் பிரஸ்—திருவாரூர்.

# திருவாரூர்-சிவப்புகழ்.

தான தந்ததன தனதன தனதன
தான தந்ததன தனதன தனதன
தான தந்ததன தனதன தனதன —தனதானா.

---

பாவ செங்குருதி யுடல்பொரு ளுறவினர்
நீடு தஞ்சமென கருதவ ரரிவையர்
பாணி தம்பமதை கதியென வுழலுவர் —கெடுசூது

பாச பந்தமதில் தலையிடு பவமொரு
சாது சங்கமதி லணுகிலர் புவிமிசை
பார மென்றுசொல திரிபவர் கயவர்க—ளொருபோதும்

நாவி லஞ்செசொன்மொழி அரகர சிவசிவ
ஞான சம்புவென வொருநொடி யளவெனு
நாடி கும்பிடவு முணர்வில ரவருற —வினிதாமோ

நாட ருந்தமிழ்செய் கவிஞனு மகிழ்வுற
தூது சென்றவன திருமல ரடியினை
நாடி சந்ததமு முறையொடு வழிபட —வருடாராய்

ஆவி னங்குழவி யறைபட நெறிமணி
யோசை வந்தயிரு செவிபட துயரொடு
ஆசை மைந்தனுடல் சகடுற பொடிபட —ரதமேவி

ஆத ரம்பெருக வமரர்கள் துதிசெய
நீதி கண்டமநு புரவல னரசிடு
மாட ரும்புகழ்கொ ளணிமதி நிலவிய —எழிலாரூர்

மூவர் செந்தமிழை முனிவர்க ளிசையொடு
பாட பைங்கிளிகள் தனதன தனவென
மோக னங்குமற நடமிடு பொழில்களு —மலர்வாவி

மூசு வண்டுலவு குவளைகள் நிறைகம
லால யங்குமறு கடலென முகிலின
மோத கைந்துபுனல் நுகரிடு வளநகர் —கைலாசா.